சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(சமய சஞ்சிகை)



ஆசிரியர்

## டாக்டர். ஸ்ரீ ஐயப்பதாஸ குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ





"இலங்கை இந்துமத குருபீடாதிபதி"

"சிவாகம ஞானி"

"சிவாச்சார்ய சிம்மம்"

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்களின் ஞாபகார்த்தமாக

சிவாச்சாரியாரின் ..........

# அருள்ஜோதி

## எனும் ஆன்மீக மாத இதழ்
## வெளி வருகிறது என்பதனை
## ஆன்மீகப் பெருமக்களுக்கு
## தெரிவித்துக்கொள்கின்றோம்.



" சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி "

## டாக்டர் ஸ்ரீஜயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார்

( அகில இலங்கை சமாதான நீதவான் )

## கொழும்பு - இந்துமத குருபீடம்

90/22, ஜோசப் டயஸ் லேன், கொழும்பு - 15.

தொலைபேசி - 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசுர வருஷம் - ஆனி மாதம் - 1997

## ஆனி மாத விசேஷ தினங்கள்

| தமிழ் திகதி | ஆங்கில திகதி | கிழமை | உத்தராயணம் - கிரீஸ்மருது - மிதுனமாசம் |
|---|---|---|---|
| 01. | 15. 6. 97 | ஞாயிறு | ஆனி மாதப் பிறப்பு |
| 02. | 16. 6. 97 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| 04. | 18. 6. 97 | புதன் | பிரதோஷ விரதம் |
| 06. | 20. 6. 97 | வெள்ளி | பூரணை விரதம் |
| 16. | 30. 6. 97 | திங்கள் | ஏகாதசி விரதம் (ஸ்மார்தம்) |
| 17. | 01. 7. 97 | செவ்வாய் | வைஷ்வை ஏகாதசி, கார்த்திகை விரதம் |
| 18. | 02. 7. 97 | புதன் | பிரதோஷ விரதம் |
| 20. | 04. 7. 97 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| 24. | 08. 7. 97 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 26. | 10. 7. 97 | வியாழன் | குமாரஷஷ்டி விரதம் - இரவு நடேசர் அபிஷேகம் |
| 27. | 11. 7. 97 | வெள்ளி | உதயம் ஆனி உத்தவம் |

கொழும்பு - இந்துமத குருபீடம்
90/22, ஜோசப் டயஸ் லேன்,
கொழும்பு - 15.
T. P. 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவாச்சாரியாரின்

# அருள்ஜோதி

(ஆன்மீக சஞ்சிகை)

அருள் – 01 | ஆனி மாதம் – 1997 | ஜோதி – 02

ஆசிரியர் : – டாக்டர் ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார். ஜே. பி.

## மலர்ந்த புஷ்பங்கள்


1. சமர்ப்பணம் ..........................
2. ஆசியுரை ..........................
3. இறைவனைப் போற்றுமின் – இலங்கை இந்துமத குருபீடாதிபதி
4. நாதன் நாமம் நமச்சிவாயவே – ஸ்ரீ. து. மணிவண்ண சிவாச்சார்யார்
5. ஆனந்த தாண்டவம் புரியும் அருள்ஜோதி – லண்டன் இந்துமத குருபீடம்
6. ஆசார்யர் காட்டும் பாதையில் ................................ ஸ்ரீபவன்
7. பன்னிருதிருமுறைகளில் கணபதி – ஸ்ரீலக்ஷ்மி
8. மாணவர் பகுதி – ராமன் பேசுகிறான். – 'நஜன்'
9. அருள்ஜோதி ஞானாமிர்தம் – வினா – விடை
10. அருள்ஜோதி ஜோதிட வினா – விடை


கொழும்பு – இந்துமத குருபீடம்

90/22, ஜோசப் டயஸ் லேன், புளூமெண்டால் றோட்,

கொழும்பு – 15.

T. P. 527025

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம :

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய பரம்பராகத

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

**ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்**

**அவர்கள்**

**ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்**

1, சாலைதெரு, காஞ்சிபுரம் - 631502.



# அருளாசியுரை

இலங்கை இந்துமத குருபீடாதிபதி

"சிவாகம ஞானி"

## அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்களின் ஞாபகார்த்தமாக வெளிவருகின்ற

## "அருள்ஜோதி"

எனும் ஆன்மீக மாத இதழ் சமயக் கட்டுரைகள், சமய வினா விடை, ஜோதிட வினா விடை, மாணவர் பகுதி என ஆன்மீக மக்களுக்கு பயனுடைய பல அரிய விஷயங்களை உள்ளடக்கி வருகிறது. மேலும் மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் திருவடிகளில் சமர்ப்பணமாகும் சிவாச்சாரியாரின் "அருள்ஜோதி" ஆன்மீக மக்களுக்கு அருளின்பம் ஊட்டும் மலராக சிறப்புடன் மலர ஆசீர்வதிக்கிறோம்.

**ஸ்ரீ நாராயணஸ்மிருதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

அம்பாள் திருவடிகளுக்கு

# சமர்ப்பணம்

இலங்கை இந்துமத குருபீடாதிபதி

'சிவாகம ஞானி' "சிவாச்சார்ய சிம்மம்"

அருள் ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

அவர்களின் ஞாபகார்த்தமாக வெளிவருகின்ற

சிவாச்சாரியாரின் ........

# * அருள் ஜோதி *

எனும் ஆன்மீக சஞ்சிகையை

கொழும்பு மயூரபதியில் அருளாட்சி புரியும்

அன்னை ஸ்ரீபத்திரகாளி அம்பாளின்

திருவடித்தாமரைகளில் திரிகரண சுத்தியுடன்

சமர்ப்பணம் செய்கிறோம்

## கொழும்பு - இந்துமத குருபீடம்

90/22, ஜோசப் டயஸ் லேன், கொழும்பு - 15.

தொலைபேசி - 527025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயூரபதியில் ......
# அருள் பொங்கும் கலைக் கோவில்

## அம்பாள் ஆசீர்வாதம்

கொழும்பு வெள்ளவத்தை மயூரபதியில் அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் மஹிமையை இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்ல, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஜேர்மன், லண்டன் போன்ற வெளிநாடுகளிலுள்ள இந்துக்களும் நன்கு அறிந்துள்ளார்கள்.

" சிவநெறிச்செல்வர் " திரு. பொன். வல்லிபுரம் **J. P.** அவர்களின் மேற்பார்வையில் அறப்பணி செய்து வரும் அறங்காவலர் சபையினர் அம்பாளின் பணிகளோடு, அறநெறிப் பாடசாலை, கல்யாண மண்டபம் இவற்றுடன் **" அருள் பொங்கும் கலைக்கோவிலை "** மூன்றாவது மாடியில் உருவாக்கி வருவது போற்றுதலுக்குரியது.

இலங்கைத் திருநாட்டில் வேறு எந்த ஆலயதர்மகர்த்தாக்களுக்கும் எட்டாத சிந்தனையை மயூரபதி அம்பாள் ஆலய தர்மகர்த்தா திரு. பொன்.வல்லிபுரம் அவர்களின் உள்ளத்தில் ஆழமாக பதியவைத்து சிறப்புற சிற்ப கலைக் கோவிலை உருவாக்கி வருகிறாள் அன்னை பத்திரகாளி.

ஒரு மனிதனுக்கு பல் பிறவிகளில் எழுகின்ற சிந்தனைகள், கற்பனைகள் அனைத்தும் இப்பிறவியில் பெற்ற பெருமைக்குரிய பொன். வல்லிபுரம் ஐயா அவர்களின் ஆன்மீகப் பணிகளை ஒவ்வொரு இந்துக்களும் பாராட்டியே தீர வேண்டும்.

அம்பாளின் அருளின்பத்தை பூரணமாகப் பெற்ற பொன். வல்லிபுரம் அவர்கள் இன்னும்பல இறை பணிகளை நிறைவேற்ற அம்பாள் அருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

**அம்பாள் ஆசீர்வாதம்**

**சிவாச்சார்ய குலபூஷணம்**
**டாக்டர். T.S. சாம்பமூர்த்தி சிவாச்சார்யார்**
**பிரதமகுரு. ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானம்**
**சென்னை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவனைப் போற்றுமின்

## இலங்கை இந்துமத குருபீடாதிபதி

மனிதன் எல்லையற்ற துன்பத்தில் உழலும்போது தான் இறைவனை நினைக்கிறான். தன்னைப் படைத்துத் துன்பத்தையும் கொடுத்து விட்டானே என்று வருந்துகிறான். இன்பத்துள் ஆழ்ந்த போது இறைவனை நினைப்பதில்லை. இறைவன் ஒருவன் இருக்கின்றானா? என்று கற்றவர்கள் சிலர் கேட்கின்றனர். இறைவனை வணங்காது விடின் அவர்கள் கல்வியாற் பயன் என்ன? என்கிறார் வள்ளுவர்.

**"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழா அர் எனின்."**

'இறைவன் ஒருவன் உளன்' என்பதை நம்பமறுப்பவர்கள் பலர். திங்கள் வானில் வருவது யாரால்? சந்திரன் திரிவது எதனால்? மின்னல் மின்னுகின்றதே அது எப்படி? இடி இடிப்பதும், மழை பெய்வதும் யாரால்? செடி முளைப்பதற்கு வித்து எப்படி உண்டானது? இவற்றை ஆராயப்புகும்பொழுது அனைத்துக்கும் மூல காரணமாக உள்ள பொருள் ஒன்று உண்டு என்பது புலப்படுகிறது. அதுவே இறைவன் என்று ஆன்றோர் மொழிந்தனர்.

இறைவன் எப்படி இருப்பான்? எத்தன்மையன்? என்பதற்கு மணிவாசகர் விடைதருகிறார். வானுலகமாகவும், மண்ணுலக மாகவும், காற்றாகவும், ஒளியாகவும், ஊனாகவும், உயிராகவும், உண்மையுமாய், இன்மையுமாய் நின்று மாந்தரை நான் எனது என்று கூறுமாறு ஆட்டுவிக்கின்றவனே இறைவன்.

**"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்**
**கோனாகி யான் எனதென்றவரவரைக்கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே."**

"இறைவனது திருவடி நீழல், குற்றமற்ற வீணையின் நாதமும், மாலை நிலவின் தன்மையும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிலின் மாட்சியும், வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும் என்று நாவுக்கரசர் நவிலுகின்றார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வெண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே."

இறைவன் தன்னை வாழ்த்தவென்று நமக்கு வாயைக் கொடுத்திருக்கிறான். நினைக்க நெஞ்சத்தையும், வணங்கத்தலையையும் கொடுத்திருந்தும் அவனை மலர்தூவி வழிபடாமல் வீண் காலம் கழித்து விட்டேன்! என்கிறார் அப்பர்.

"வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே."

கங்கையில் நீராடினும், காவிரியில் நீராடினும், குளிர்ச்சியுடைய குமரித்துறையில் நீராடினும், பேரொலி செய்கின்ற கடல் நீர்த்துறையில் நீராடினும் என்னபயன்? எங்கும் இறைவன் என்று கூறாதவர்க்கு ஏதும் பயனில்லை.

"கங்கையாடிலன், காவிரி யாடிலன்
கொங்குதண் குமரித்துறை யாடிலன்
ஓங்கு மாகட லோத நீராடிலன்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே."

வேதம் ஓதினாலும், வேள்வி செய்தாலும் நீதி நூல்களை நித்தம் பயின்றாலும் ஆற்றங்களை ஓதி உணர்ந்தும் என்னபயன்? ஈசனை உள்குப்பவற்கு அன்றி மற்றவர்க்கு இதனால் பயனில்லை.

"வேத மோதிலென் வேள்விகள் செய்யிலேன்
நீதி நூல் பல நித்தம் பயிற்றிலென்
ஓதி யங்கமோ ராறு முணரிரென்
ஈசனை உள்கு வார்க்கன்றி யில்லையே."

நன்கு தவம் நோற்றாலும் உண்ணாவிரதம் கிடந்தாலும், மலையிலேறிப் பெருந்தவம் செய்தாலும், நீரில் குளிர்த்தும் பயன் என்ன? ஈசன் என்பார்க்கன்றி மற்றையோர்க்கு இவற்றால் என்ன பெருமை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை நீர்க்குமிழி போன்றது. செல்வமோ விரைவில் அழியும் தன்மை கொண்டது உடல் நீர் மேல் எழுத்துப் போன்று நிலையற்றது. அதனால் எம் பெருமானது சிற்றம்பலத்தைத் தொழுதல் வேண்டுமென்கின்றார். குமரகுருபரர்.

**"நீரிற் குமிழி யிளமை நறை செல் வம்**
**நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்- நேரில்**
**எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னை**
**வழுத்தாத தென்பிரான் மன்று."**

இளைஞனாக இருப்பவன் பல ஆண்டுகளுக்குப் பின் முதுமை அடைந்துவிடுகிறான். இரண்டு கால்களால் நடந்தவன் மூன்று கால்களால் நடக்க வேண்டியுள்ளது. பின் காலன் எப்போது வருவான் எனக் கலங்க வேண்டியிருக்கிறது. இத்தகைய நிலை ஏற்படுமுன் மனமே நீ கச்சி ஏகாம்பர நாதரை வழிபடுவாயாக எனக் கூறுபவர் காளமேகப் புலவர்.

**முக்காலுக் கேகாமுன் முன்னரையில் விழா முன்**
**அக்காலரைக் கால் கண்டஞ்சாமுனி விக்கி**
**இருமாமுன் மாகாணிக்கே காமுன் கச்சி**
**ஒரு மாவின் கீழரையின் றோது.**

நல்லோர் எப்படி வாழினும் 'எல்லாம் அவன் செயல்' என்று தமக்குத்துன்பமுறுங்கால் மனம் தேறுவர். நமக்கு மேலே ஒருவன் இருக்கிறான் நாம் ஏமாற்ற முடியாது. அவனை நினைத்த போதே அச்சத்தால் உடல் நடுங்குதல் அறிவுடைமையாகும்.

**"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்**
**வஞ்சித் தே மென்று மகிழன் மின் - வஞ்சித்த**
**எங்குமுள னொருவன் காணுங்கொ லெறைஞ்சி**
**அங்கங் குலைவதறிவு."**

இறைவனைப் போற்றி அவனருள் பெறுதலே, மாந்தராய்ப் பிறந்தோர்க்கு உய்யும் வழியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# * நாதன் நாமம் நமச்சிவாயவே *

"மறைவண்ணர்" சிவஸ்ரீ. து. மணிவண்ண சிவாச்சார்யார்
(பிரதமகுரு, ஸ்ரீராஜமாரி அம்மன் தேவஸ்தானம் ஜோகூர்பாரு, மலேசியா)

**நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க**
**இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**
**கோகழியாண்ட குருமணி தன் தாள் வாழ்க**
**ஆகம மாகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க.**

**மாணிக்கவாசகர் (சிவபுராணம்)**

சிவ வழிபாட்டுக்கு ஜீவஸ்தானமாக உள்ளது " பஞ்சாட்சரம். (" நமசிவாய ") என்ற மகா மந்திரம்.

மதுரையில் மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம் போல இது வேதத்தில் நடு மையத்தில் அழகாக அமைந்துள்ளது. வேதங்கள் நான்கு என்றாலும் அதர்வண வேதம் மற்ற மூன்று வேதங்களின் தொகுப்பே. வேதங்களில் மூன்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

**த்ரயீவை வித்யா: ரிச : யஜூஷி ஸாமாநி**

என்று சதபதப் பிராம்ஹணம் கூறுகிறது. " இதி வேதா த்ரயஸ்தவீ " என்பது அமர நிகண்டு. ரிக்குகளால் துதிக்கிறார்கள். யஜுஸ் ஆல் ஹோமம் (யக்ஞம்) செய்கிறார்கள். ஸாமத்தால் பாடுகிறார்கள். இம்மூன்றில் நடுவிலுள்ளது யஜுர் வேதம். இதில் 101 சாகைகள். 51 – வது (நடு) சாகை போதாயன சாகை எனப்படும். இதில் ஏழு காண்டங்கள். இதில் நாலாவது (நடு) காண்டம் சதுருத்ரீயம். இதன் நடுவில் உள்ளது ஐந்தாவது பிரச்னம். அதில் சோமாயச, ருத்ராயச என்னும் அனுவாகத்தின் இருதயத்தில் நமசிவாய அமைந்திருக்கிறது.

இதைப் பார்க்கும் போது ஒரு கிடைத்தற்கரிய ரத்தினத்தை மிகப் பத்திரமாகப் பாதுகாப்பது போல இம் மந்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் குறிப்பிட்டதாவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யஜ்-ஜீவரத்ன மகிலாகம லாலனீயம்**
**யே சத்ரி நேத்ர - ம்ருட சங்கர நாம தேயே**
**ஏதைரபி ஸ்புட மனன்ய ஸமாச்ரயம் தே**
**விக்யாப்யதே ஸகல ஜீவ ஸுகப்ரதத்வம்**

எப்படி வேதத்தில் "நமசிவாய" நடுநாயகமாக விளங்குகிறதோ அதுபோலவே தமிழ் மறையாகிய மூவர் தேவாரத்தில் இது நடுவில் காணப்படுகிறது. "பழுத்தன ஐந்தும் பழமறையினுள்ளே" என்பது திருமூலர் வாக்கு. "வேத நான்கினும் மெய்ப்பொருளாவது" என்று சம்பந்தர் அருளியிருக்கிறார்.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் இயற்றிய பாடல்கள் தேவாரம் எனப்படும். மூவர் தேவாரத்துள் இடை நிற்பது திருநாவுக்கரசர் தேவாரம். நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள் திருநாவுக்கரசரால் அருளப்பட்டவை. இம் மூன்றில் நடுவிலுள்ளது ஐந்தாம் திருமுறை.

இத் திருமுறையில் இடம் பெற்றிருக்கும் பதிகங்களின் எண்ணிக்கை 100. இறுதியில் உள்ள 97வது பதிகம் சித்தத் தொகை, திருக்குறுந் தொகை, இரண்டு பதிகங்களுக்குரிய பாடல்களைக் கொண்டது. இதனை இரண்டாகக் கொண்டால் பதிகத் தொகை 101 ஆகும்.

இவ்வகையில் நடுப் பதிகமாக அமைவது 51ம் பதிகமாகிய திருப்பாலைத்துறைப் பதிகம். இப்பதிகத்தில் இடம் பெற்றுள்ள 11 பாடல்களில் இடை நிற்பதாகிய 6ம் திருப்பாட்டில் 'சிவாய' என்னும் சிவமூல மந்திரம் அமைந்து விளங்குகிறது.

**விண்ணினார் பணித்தேத்த வியப்புறும்**
**மண்ணினார் மறவாது சிவாயவென்**
**றெண்ணினார்க்கிட மா எழில் வானகம்**
**பண்ணினாரவர் பாலைத் துறையரே**

பக்தியின் துணைகொண்டு தான், சமயத்தின் அனுபவத்தை பெற முடியும். எனவே மந்திரம் சைவத்திற்கு முக்கியமாகிறது. நினைத்த பயனை கொடுப்பது மந்திரம். மந்திர ராஜாவாக இருப்பது "நமசிவாய" என்னும் பஞ்சாட்சரம். இதில் "நம" என்பது நாம் விலக்க வேண்டிய அகங்கார மமகாரங்களைக் குறிக்கிறது. "சிவ" என்பது துணியப்படும் பொருளைக் குறிக்கிறது. "ய" துணிகின்ற நம்மைக் குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவ" என்ற வார்த்தை எப்படி ஏற்பட்டது? சிவ வை இ அ என்று பிரிக்கலாம். இதில் இயங்கும் எழுத்து "ச" காரமும், "இ" காரமும், "ச" என்பது சரண் என்கிற புகலிடத்தைக் குறிக்கும். இ-இவன் என்பதைக் குறிக்கும். "இவனிடம் நீ சரணடைய வேண்டும்" என்பதை இந்த "சிவ" குறிக்கிறது.

"வ" உயிரைக் குறிக்கிறது. "ய" ஆருயிரைக் குறிப்பிடும் குறிப்பு எழுத்து. "ந" மறையாற்றலைக் குறிக்கிறது. "ம" மலம் மாயைகளைக் குறிக்கும். உயிர்கள் இறைவனை சரண் அடைந்தால் எல்லா கஷ்டங்களும் நீங்கி அவன் அருள் பெறலாம் என்பதே "சிவாய நம" என்ற சொல்லின் அர்த்தம்.

## பஞ்சாட்சரம்

பஞ்சாட்சரமே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்னும் பஞ்ச பிரும்ம மத்திரங்களாகி அவை ஒவ்வொன்றும் இருபத்தைந்தாக நூற்றிருபத்தைந்து பஞ்சாட்சர மந்திரங்களாக விரிந்துள்ளன. இந்த விரிவு எல்லாம் ருத்திர யாமளம், ஆம்நாயம் முதலிய நூல்களில் விளக்கப்பட்டுள்ளன. (ஈசானம், தத்பருஷம் முதலிய ஐந்து சிவபெருமானின் ஐந்து முகங்களாகும்.)

பஞ்சாட்சரம் ஓது முறையில் ஐந்து, வகைகள் கூறப்பட்டுள்ளன. அவை:-

**"ந" காரம் முதலாக ஓதுவது மறை வழக்கு,**
**"சி" காரம் முதலாக ஓதுவது ஆகம வழக்கு,**

அறிவால் சிவமே என்று போற்றப் பெற்ற மாணிக்கவாசகர் தன் சிவபுராணத்தில் நமசிவாய வாழ்க என்று தொடங்கியவர் சிவாய என்று முடிப்பது கவனிக்கத்தக்கது. எட்டெழுத்து, பன்னிரண்டு எழுத்து மந்திரங்கள் பிரணவத்துடனேயே ஓதப்படும். இந்த பஞ்சாட்சரமும் ஷடாக்ஷரமும் பிரணவமின்றியே ஓதப்படும் காரணம், இந்த மந்திரங்களுக்கும் பிரணவத்திற்கும் வேற்றுமையில்லை. இந்த ஐந்தெழுத்தை "தாரகம்" என்பர்.

### பஞ்சாட்சர ஐந்து எழுத்துக்கள் குறிப்பிடும் பொருள்கள்

| | | |
|---|---|---|
| பஞ்ச பூதங்கள் | : | ஆகாயம், வாயு, அக்னி, நீர், மண். |
| பஞ்சதன் மாத்திரைகள் | : | சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம். |
| பஞ்ச கன்மேந்திரியங்கள் | : | வாக்கு, சப்தம், கை, கால், உபஸ்தம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச ஞானேந்திரியங்கள் : கண், காது, மூக்கு, வாய், மெய்.
அந்தக்கரண பஞ்சகம் : புத்தி, அகங்காரம், சித்தம், மனம், உள்ளம்.
பஞ்ச கலைகள் : நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்யை, சாந்தி, சாந்தியாதீதம்.
பஞ்ச சாதாக்கியம் : கன்மம், கர்த்துரு, மூர்த்தி, அமூர்த்தி, சிவம்.
பஞ்ச சக்தி : பராசக்தி, ஆதி சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி.
பஞ்ச பிரும்மம் : ஈசானம், தத்புருஷம், அகோரம், வாம தேவம், சத்யோஜாதம்.
பஞ்ச கர்த்தாக்கள் : பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்.
பஞ்ச கிருத்தியங்கள் : சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரகம்.
பஞ்ச வர்ணங்கள் : அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம்.
பஞ்ச பக்ஷிகள் : வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.

பஞ்சாட்சர எழுத்துக்கள் மாற்றி அமைத்து உருவேற்றி ஜபிப்பதன் மூலம் ஸ்தம்பனம், மோகனம், வசியம், ஆக்ருஷணம் என்ற அஷ்ட கர்ம வித்தை சித்திகளைப் பெறலாம்.

## ஜபத்திற்கு ஏற்றவை

**சிவபஞ்சாக்ஷரீ – ஓம் நம : சிவாய**
**சக்தி பஞ்சாக்ஷரீ – ஓம் ஹ்ரீ நம : சிவாயை**
**ஸ்ரீ குரு தாரக பஞ்சாக்ஷரீ – ஓம் நம : சிவாய**
**ஓம் நகாராய நம : சிவாய**
**ஓம் மகாராய நம : சிவாய**
**ஓம் சிகாராய நம : சிவாய**
**ஓம் வகாராய நம : சிவாய**
**ஓம் யகாராய நம : சிவாய**
**ஓம் நம : ஸ்ரீ குரு தேவாய**
**பரம புருஷாய ஸர்வ தேவதா வசீகராய,**
**ஸர்வாரிஷ்ட விநாசாய ஸர்வதுர் மந்திர சேதனாய**
**த்ரை லோக்யம் வசமானய ஸ்வாஹா**

தொடரும் .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த நடனம் புரியும் அருள்ஜோதி

டாக்டர் சாம்பசிவ ஷண்முகநாத சிவாச்சாரியார்
(லண்டன் - இந்துமத குருபீட ஸ்தாபகர்)

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீரும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே

(திருநாவுக்கரசர்)

சொல்லில் விளக்க முடியாத தத்துவத்தை இறைவன் ஆடிக் காட்டுகிறார். வானம் மணி முகடாய் மால்வரையே தூணாக பெரும் பார் (பூமி) அரங்காக அமைத்துக் கொண்டு அவன் ஆடுகிறான். இந்த உலகின் உயிர்தத்துவமே அசைவில் தான் இருக்கிறது. அசைவு அதிகம் ஆக ஆக அதுவே ஆட்டமாகிறது. ஒரு காலை ஊன்றி ஒரு காலை தூக்கி நிலைத்து சில விநாடி கூட நிற்க முடியாது. ஆடிக் கொண்டே இருந்தால் அந்நிலையில் எவ்வளவு காலம் வேண்டு மென்றாலும் இருக்கலாம். இவன் ஆடும் இடம் சிதம்பரம். சித் - அம்பரம். சித் என்பது அறிவு. அம்பரம் என்பது வெளி. அறிவு வெளியில் இறைவன் நடனமாடுகிறான். உயிருக்கு அறிவு என்ற பெயர் உண்டு. இறைவன் உதவியின்றி அறிவு உயிரொன்றையும் அறியவோ செய்யவோ மாட்டாது. சக்தியாகிய அன்னை இவன் ஆடலை கண்டு மகிழ விரும்பியதால் மனமுவந்து ஆடினானாம். இதிலுள்ள கருத்து கவனத்திற்குரியது.

உண்மை அறிவானந்த உருவாகி
எவ்வுயிருக்கும் உயிர்வாய் நீரின்
தண்மை அனல் வெம்மை
எனத்தனை அகலாது
இருந்து சராசரங்கள் ஈன்ற
பெண்மை உருவாகிய தன்
ஆனந்தக் கொடி மகிழ்ச்சி பெருக
யார்க்கும் அண்மையதாய்
அம்பலத்துள் ஆடியருள் பேரொளியை
அகத்துள் வைப்போம் - திருவிளையாடற் புராணம் பாயிரம்

உண்மையாய், அறிவாய் ஆனந்தமாய் உயிர்க்கெல்லாம் உயிராய் புனலின் தண்மை போலும் அனலின் வெம்மை போலும் எப்போதும் என்னை விட்டு நீங்காது சேர்ந்திருந்து சரா சரங்களை எல்லாம் ஈன்றெடுத்த அன்னை கண்டு மகிழ எவரும் எளிதில் சென்றடையும் வெட்ட வெளியில் அருட் ஜோதி வடிவாக இறைவன் ஆடுகிறான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களிலும் பரமன் விளையாடல்களே அவற்றை ஒருங்கே சித்தரிப்பதே ஆனந்த தாண்டவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கும் துடி சிகரம் சிக்கனவா வீசு தூரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்– பார்க்கில் இரைக்கு
அங்கி நகரம் அடிக் கீழ் முயலணார்
தங்கும் மகரமது தான் உண்மை விளக்கம்

சிவலிங்க உருவில் தரிசித்த பிரணவ மான 'ஓம்' திருவாசியாகவே இங்கு விளங்குகிறது. அந்த நாதத்துள் நாதமாய் ஆடுகிறார். நடராஜா நாதமும் ஒளியுமாய் நடமாடும் இக் கூத்தன்" சிவாய நம " என்ற பஞ்சாக்ஷர வடிவமாய் விளங்குகிறான். ஒரு கரத்தில் ஒலிக்கும் துடியில் 'சி' கரமும் வீசிய கரத்தில் "வ" கரமும் அபய கரத்தில் 'ய' கரமும் எரியும் அனலில் 'ந' கரமும் திருவடிக் கீழ் மதியுண்டு கிடக்கும் முயலகன் வடிவில் 'ம' கரமும் அடங்கும்.

சிவாய நம என்றால் சிவனுக்கு வணக்கம் என்று பொருள்

சி – சிவத்தையும்
வ – சக்தியையும்
ய – உயிரையும் குறிக்கும்

ஆணவம் அழித்து ஆண்டவன் பால் மெய்யான அன்பு கொண்ட உயிர்கள் அருட் சோதியில் கலந்து ஓம்கார நாதத்தோடு சேர்ந்துவிடும். உயிர்கள் எவ்வாறு தோன்றி வளர்ந்து செயல்பட்டு செயலின் பயனாக இன்ப துன்பங்களில் சிக்குப்பட்டு உழன்று முடிவில் அவனருளால் அவனடியை அடைகின்றன என்ற கருத்துகளை ஐந்து எழுத்துகளாக சுருக்கி அதை ஆனந்த தாண்டவமாக சித்தரித்துக் காட்டும் நடராஜா உரு தமிழர் தம் சிந்தனை செல்வம்.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமையில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்றும் மலர் பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு – (உண்மை விளக்கம்)

துடிப்பில் பிறப்பது நாதம் –சிருஷ்டி இதை குறிப்பது உடுக்கை. இந்த துடி ஏது? இதுவும் அவன்தான். துடியின் ஒலியும் அவனே.

உயிர்களுக்கு அருள்வது அபய கரம். வீசிய கரம் திருவடியை நம்பினால் உய்வுண்டு என்பதைக் காட்டுகிறது. எரியும் தீ அழித்தல்செயலைக் குறிக்கிறது. ஊன்றிய திருவடி மறைத்தலைக் குறிக்கிறது. எதை மறைக்கிறான்? ஆணவம் முதலான மலங்களைத் தான். உயர்த்திய திருவடி உயிர்கள் பெறத்தகும் பேரின்ப நிலையைக் குறிக்கிறது. மெய் ஞானம் என்ற நெருப்பால் மும் மலங்களாகிய அழுக்குளை சுட்டெரித்து பரிசுத்த முற்ற உயிர்களை இறைவன் தன்னுடன் இணைத்துக் கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடராஜ 'வித்யை'

திருவழி யாவது சிற்றம் பலத்தே
குருவடி வுள்ளாக குனிக்கும் உருவே
உருவரு வாவதும் உற்றுணர்ந் தோர்க்கு
அருள் வழியாவதும் அவ்வழிதானே.

நடராஜரை சிரஸில் தியானிக்க வேண்டும். இருதய தியானம் உருவத்துடன் கூடியது. எல்லா உருவங்களையும் அருபமாகக் காண்பது ஞான முதிர்ச்சி சிரசின் மேல் 12 விரற்கடை அளவில் விளங்கும் பிரதேசத்தில் (துவாத சாந்தத்தில்) தியானிக்க வேண்டும். ஆத்மா த்வாத சாந்த வெளியில் உள்ளது. அதன் கருவிகளான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஜீவனில் பொருந்தி அறிவு பொருந்திய மூளையை இடமாகப் பெற்றுள்ளது. ஜீவனே ஆத்மாவின் கால்.

## சந்திர சேகரர்

நெற்றியங் கண்ணுடை நிமலத் தெம்பிரான்
உற்றவர்க் கருள் புரிகின்ற உண்மையை
தெற்றன உணர்தல் போல் திங்களின் கலை
கற்றையஞ் சடை மிசைக் கவின்று பூத்ததே.

– கச்சியப்பர் (கந்த புராணம்)

சிவ பெருமான் எளியவருக்கும் அருளுபவர் என்பதை உணர்த்துவதே அவருடைய பிறை சூடிய கோலம் யாவராலும் வணங்கத்தக்க வரும் அடைக்கலமாக அடையதக்க வரும் சிவபெருமான் ஒருவரே என்பது மேற்கண்ட கந்தபுராணப் பாடலிலிருந்து தெரிய வருகிறது. மற்றெல்லாரையும் விட சிவ பெருமானே தியானிக்கப்பட வேண்டியவர் என்ற பொருளைத்தரும் வாக்கியம் அதர்வசிகோபநிஷத்தில் உள்ளது. பிறையை அணிந்தது காரணமாகவே அவருக்குக் கலாதரர் என்ற பெயர் ஏற்பட்டது. மதி மருவுள்ளது. பிறை மருவில்லாதது. தூயமானது. ஆகவே ஞானத்தின் அறிகுறி.

தீர்த்தன அன்றியே திங்கள் தன்னிடை
ஆர்த்திரு கலையின் அங்கையில் கொளா
வார்த்திடு சடை மிசை வயங்கச் சேர்த்தினால்
சார்ந்தில அவ்வழி தக்கன் சாபமே. – (கந்த புராணம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசாரியர் காட்டும் பாதையில்

**– ஸ்ரீபவன் –**

**வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடும்**
**உன் மகிமையது செல்ல எளிதோ**
**மந்த்ர குருவே தந்த்ர குருவே**
**மூலன் மரபில் வருமெளன குருவே**

**– தாயுமானவர்**

குருவின் உதவியாலேயே எதையும் செய்யவேண்டும், வேறு வழிபாடுகளில் உள்ளதைவிட ஐயப்பன் வழிபாட்டில் இது மிகவும் முக்கியம். ஐயப்ப பக்தர்கள் குரு தத்துவம் பற்றி முக்கியமாக தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

சகலத்திலும் பூரணத்துவம் அடைந்தவரும், தூய்மையானவருமே குரு ஆவார். கப்பலை ஓட்டிச் செல்லும் மாலுமி போன்றவர் அவர். குரு வழி செல்லாத சிஷ்யனும், குரு இல்லாத வித்தையும், தலைவன் இல்லாத சேனையும், கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கையும், விரதமும் பஜனையுமில்லாத பக்தியும், அறவழி செல்லாத அரசனும் பயனற்றவை.

குருவுக்கு மேலான தத்துவம் இல்லை குருவுக்கு மேலான தபஸ்ஸும் கிடையாது. "கு" என்றால் அக்ஞானம். "ரு" என்றால் அதை ஒழிப்பவர்.ஆகவே குரு அஞ்ஞானத்தை ஒழிப்பவர்.

இந்த குரு எங்கிருக்கிறார்? அவர் நம் சரீரத்திலேயே இருக்கிறார். எண்சாண் உடம்பிற்கு பிரதானமாக விளங்குவது சிரஸ் (தலை). அதிலுள்ள பிரும்மரந்திரத்தில் அவர் வீற்றிருக்கிறார். நெற்றியில் ஓடும் மூன்று ரேகைகளில் முதல் ரேகையில் குருவும், இரண்டாம் ரேகையில் அவர் குருவும், மூன்றாவது ரேகையில் அக்குருவின் குருவும் வீற்றிருக்கிறார்கள். அதாவது நம் குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு ஆகிய மூவரும் நம்மைக் கட்டிக் காக்கும் பொருட்டு நம்மிடத்திலேயே வாசம் செய்கிறார்கள். ஒவ்வொரு வினாடியும் நம்மிடையே பற்பல எண்ணங்கள் உதயமாகின்றன. அந்த எண்ணங்களைச் செயல்படுத்தி பரிமளிக்கச் செய்கிறோம். அச்செயலின் பலனை அடைந்த பிறகு அந்த எண்ணத்தை நம்மிடையே ஒடுக்கிக் கொள்கிறோம். உதித்து உற்பத்தியாகி ஒடுங்கும் தன்மை நம்மிடத்தில் உள்ளது என்று சொல்லுகிறார்கள். இந்த மூன்று செயல்களும் குருவின் அருளால் தினம் தினம் நம்மிடையே நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமகிருஸ்ண பரமஹம்ஸர் காட்டும் குரு

(குரு என்பவர் யார் என்பது பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஹர் தரும் விளக்கம்.)

" ஈசுவரன் ஒருவனே ஜகத் குருவும் வழிகாட்டியுமாவர். மனித குருவானவர் மகா மந்திரத்தை காதில் மட்டும் உபதேசிக்கிறார். தெய்வ குருவோ ஆத்மாவுக்குள் சைதன்யத்தை செலுத்துகிறார். குருவை ஒரு மத்தியஸ்தராகச் சொல்லலாம். ஈஸ்வரனையும் மனிதனையும் குரு சேர்த்து வைக்கிறார்.

குரு, மகிமை வாய்ந்த கங்கைக்கு சமானம். அந்நதியில் குப்பை கூளங்கள், அசுத்தங்கள் எறியப்பட்ட போதிலும் அதன் புனிதத்தன்மை குறைவதில்லை. அதுபோல நிந்தனைகளாலும் வசவுகளாலும் குரு பாதிக்கப்படுவதில்லை.

ஈசுவரனுடைய ரகசியங்களை அறிய வேண்டும் என்கிற தீவிர புத்தி உனக்கு இருக்குமானால் அவ்வீஸ்வரனே சத் குரு ஒருவரை உன்னிடம் அனுப்புவார். குருவை தேடவேண்டிய விஷயத்தில் கவலை வேண்டாம்.

நமக்கு கொஞ்சம் கொஞ்சம் விஷயங்களைக் கற்பிக்கும் ஒவ்வொருவரையும் குரு என்று சொல்லாமல் ஒரே ஒருவரை மட்டும் குரு என்று சொல்லவேண்டிய அவசியமென்ன? முன்பின் தெரியாத தேசங்களுக்கு நீ போனால் அவ்விடமுள்ள பரிச்சமான வழிகாட்டி சொல்வதைக் கேட்பதாக இருந்தால் நிச்சயமாகத் தடுமாறிப் போவாய். அதைப்போல ஈசுவரனை அடையவேண்டிய முயற்சியில் அவரிடம் போகும் வழியைத் தெரிந்துள்ள ஒரு குருவின் புத்திமதியையே கடைப்பிடிக்க வேண்டும்.

மனம் கசிந்த பிரார்த்தனை, ஆழ்ந்த பக்தி, தீவிரமான மனம் இவற்றோடு எவன் ஈசுவரனிடம் போக முடியுமோ அவனுக்கு குரு வேண்டியதில்லை."

ஸாரூப்யம், ஸாமீப்யம், ஸாலோக்யம், ஸாயுஜ்யம் என முக்தியை நான்கு வகையாக கூறுகிறார்கள். பரமனை பூஜிப்பதால் ஸாரூப்ய முக்தியும், பரமன் நாமங்களையே சங்கீர்த்தனம் செய்வதால் ஸாமீப்ய முக்தியும், பரமன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதால் ஸாலோக்ய முக்தியும், இடைவிடாத பரமனின் தியானத்தில் ஸாயுஜ்ய முக்தியும் பெறப்படுகின்றன. மனதை ஒன்றுபடுத்தும் வழி கண்டுவிட்டால் இந்த நான்கு முக்திகளையும் அடைவது எளிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள் தாங்கள் பெற்ற ஞான அனுபவங்களை நமக்கு புரியாதபடி பாடி வைத்துவிடுகிறார்கள். திருமூலரை எடுத்துக் கொள்வோம்.

**எழுதாத புத்தகத்து ஏட்டின் பொருளை**
**தெருளாத கன்னி தெரிந்திருந்து ஓத**
**மலராத மொட்டின் மணத்தின் மதுவை**
**பிறவாத வண்டு மணம் கண்டவாறே**

என்கிறார்.

எழுதாத புத்தகத்திற்கு ஏடு ஏது? பொருள் ஏது? தெருளாத (தெளிவில்லாத) கன்னி எப்படி தெளிந்து ஓதினாள்? மலராத மொட்டுக்கு மணம் ஏது? பிறவாத வண்டு எப்படி மணத்தோடு கூடிய தேனை உண்ணும்?.

நமக்கு ஒன்றும் புரியவில்லை. இவை நமக்குப் புரியாது என்பது திருமூலருக்கே தெரியும். ஆகவே அவர் ' நல்ல குருவை நாடிக்கேள் ' என்று நமக்கு வழியும் சொல்லிக் கொடுக்கிறார்.

**விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்**
**விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே**

என்கிறார்.

பேருண்மை என்ற விளக்கு கோடி சூரிய பிரகாசமாகப் பிரகாசிக்கிறது. ஆனால் உங்கள் கண்ணுக்கு அது புலப்படுவதில்லை. அதை உங்களுக்கு காட்டவே குருநாதர் தீவட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கிறார். அவர் விளக்கினால், விளக்குகள் இருக்கும் இறைவன் உங்களுக்கும் காட்சியளிப்பான் என்கிறார். தீவட்டி கொண்டு வெளிச்சம் காட்டும் குருநாதரை விளக்குடையார் என்றும், விளக்குக்குள்ளே ஒளிந்து நிற்கும் இறைவனை விளக்கவர் என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

ஐயப்பன் வழிபாட்டில் சரணாகதிக்குப் பின் மிக முக்கியமாக விளங்குவது ஆசாரிய ஸ்தானம்.

(ஐயப்ப பூஜை செய்து வைக்கும் தகுதியுள்ளவர்கள், சபரிமலை பலமுறை சென்று ஐயப்பனை வழிபட்டவர்களும், கன்னி ஐயப்பன்மார்களுக்கு குருவாக இருக்கத் தகுந்தவர்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை நினைத்துப் பாடுவதிலோ ஆடுவதிலோ வெட்கம் என்பதற்கு இடமில்லை. பகவானுடன் மனதையொன்றிவிட்டால் நாம் ஆடுவதைக்கொண்டு பிறர் சிரிப்பார்களே என்ற எண்ணம் எப்படி ஏற்படும்?

ஐயப்ப வழிபாட்டில் சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், தாஸ்யம், ஸக்யம் இவை எல்லாவற்றிலும் முக்கியத்துவம் உண்டு.

**"ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ**
**ஸ்மரணம் பாதசேவனம் அர்ச்சனம் வந்தனம்**
**தாஸ்யம் ஸக்யம், ஆத்ம நிவேதனம்,"**

என பக்தியை பலவாறாக பாகவதம் கூறுகிறது.

நல்லதைப் பார்த்து, நல்லதைக் கேட்டு, நல்லதைப் பேசுபவன் தான் உண்மையான பக்தன். பஜனை, ஜபம், தபம், தியானம் ஆகியவைகள் நமது பாவங்களைப் போக்குகின்றன. பஜனை நம்மை தெய்வீக பாதையில் செலுத்துவதோடு அல்லாமல் நல்வழியில் செல்ல திடமான மன உறுதியையும் வாழ்க்கையில் வெற்றியையும் நித்யானந்தத்தையும் தருகிறது.

பிரதி தினம் ஒரு குறித்த நேரத்தில் இஷ்ட மித்திரர்களுடன் ஒன்றாகக் கூடி நாம சங்கீர்த்தனை செய்வது போல் ஆனந்தம் உண்டாக்குவது வேறெதுவுமில்லை. உள்ளத்தில் சாந்தியுண்டாகும். கவலைகள் அந்த சமயத்திற்கு மட்டுமாவது மறைந்து போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகளில் கணபதி



**- ஸ்ரீலக்ஷ்மீ -**

**திருமுறை - 1 : சம்பந்தர் தேவாரம்**

பிடியத னுருவுமை கொள மிக கரியது
வடிகொடு தனதடி வழிபடும் வழிபடுமவரிடர்
கடி கணபதி வரவருளினன் மிகு கொடை
வடிவின பயில் வலிவல முறை இறையே (திருவலிவலம்)

**திருமுறை - 2 :**

கரியின் மாமுகமுடைய கணபதி தாதைபல் பூதுந்
திரிய வில்பலிக்கே குஞ்செழுஞ் சுடர் சேர்தரு மூதூர்
சரியின் முன்கை நன் மாதா சதிபட நடமாடி
உரிய நாமங்கள் ஏத்துமொப்பி புனற் காழி நன்னகரே (சீகாழி)

**திருமுறை - 4 : திருநாவுக்கரசர்**

பலபல காமத்தராசி பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்றும் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான் கயிலாயை மயிலையும்.
நலமார் கெலிப்புலனும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை அஞ்சவருமதுமில்லை. (திருவதிகை)

**திருமுறை - 6 :**

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யதனாற் கொல்வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனை முன் சிதைத்தார் போலும்
திசைமுகன் தன் சிரமொன்றும் சிதைத்தார் போலும்
மெய் வேள்வி மூர்த்தி தலையறுத்தார் போலும்
வியன் வீழி மிழலையிடம் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்கமானார் போலும்
அடியேனை ஆளுடைய வடி கடாமே (திருவீழி மழலைதிருத்தாண்டகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாத செய்கைப் பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக்கண்டேன்
பரிந்தார்க்கு அருளும் பரிசும் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கக் கண்டேன்
விருந்தாய் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியனும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணி தீர்க்குமாறு கண்டேன்
வாய்மூரடிகளை நான் கண்டவாறே (திருவாய்மூர் – திருத்தாண்டகம்)

**திருமுறை – 9 : திருமாளிகைத் தேவர்**

தன தனற்றேழா சங்கரா சூலபாணியே தாணுவே சிவனே
கனக நற்றூணே கற்பகக் கொழுந்தே கண்கள் மூன்றுடையதோர்
அனகனே குமர விநாயக சனக அம்பலத்த மரசே கரனே (கரும்பே
உன் கழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன்
நுகரு மாநுகரே (திருவிசைப்பா – திருப்பல்லாண்டு)

**திருமுறை – 10 : திருமூலர்**

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே (திருமந்திரம்)

**திருமுறை 11 : (1) சேரமான் பெருமான் நாயனார் – நாமஞ்சேர்**

வேழமுகத்து விநாயகனை உள்ளுறுத்தி – திருக்கயிலாய ஞான உலா

**(11) கபிலதேவர் நாயனார்**

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு – முருவாக்கு
மாதலால் வானேருமானை முகத்தானை
காதலால் கூப்புவர் தம் கை. – மூத்தநாயனார் திருவிரட்டை
மணிமாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (111) நம்பியாண்டார் நம்பி

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர் கெடுத்து
தன்னை நினையத்த தருகின்றான் – புன்னை
விரசு மகிழ் சோலை வியனாதையூர் முக்கண்
அரசு மகிழ் அத்தி முகத்தான் – திருநாரையூர் விநாயகர் இரட்டை
மணிமாலை

### (IV) இளம் பெருமானடிகள்

உழிதரன் மடிந்து கழுது கண்படுக்கும்
இடறாது முது காட்டுச் சீரியல் பெரும்
புகர் முகத் துளைக்கை யுரவோன் தாதை
நெடியோன் பாகநின்சுடர் மொழி யாண்மை பயிற்று
நாவலர்க் கிடர்தரு தீவினை கெடுத்தலோவெளிதே – சிவபெருமான்
முன்மணிக் கோவை

### (V) அதிராவடிகள்

நிலத் துலங்க நெடுவான்
தலத்துளங்கச் சப்பாணி கொட்டு கலந்துளங்கோள்
காமரி யீன்ற கருங்கைக் கடதடத்து மாமரி யீன்ற மணி – மூத்த
பிள்ளையார் திருமும்மணிக் கோவை

## திருமுறை – 12 : சேக்கிழார்

எடுக்கும் மாக்கத்தை இன்தமிழ் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட
நடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள் முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

## புராணங்களில் கணபதி காப்புச் செய்யுள்கள்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுரை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம் – (கந்த புராணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியாகி சிவமாகி தனிப்பர
முத்தியான முதலைத் துதி செய்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன்செய்ய பொற்பாதமே – திருவிளையாடற் புராணம்

பண்ணியமும் பெண்கோடும் பாசாங்குசப் படையும்
நண்ணிய செங்கைத் தலத்து நாதா – ஒரு கோட்டுத்
தண்ணிய வெண்பிறைத் தாழ்சடையாய் மெய்யடியார்
எண்ணிய எண்ணியாங் கீழ்ந்தருளும் வள்ளலே – காஞ்சிப் புராணம்

வான நாட்ர்கள் மாதவர் நாடரும்
மோன ஞான முழுதும் உணர்ந்திடத்
தான மேவும் அடவிகடா சலத்தான்
மாமுகதண்ணலை ஏத்துவாம் – சிதம்பர புராணம்

திருமன்னு வேள்வி மவைமுனிவர் மனப்
புலத்தெழுந்து சிறப்பினோங்கிக்
கருணை தழைத்தற மரும்பி ஞானம் பூத்
தகல் வினையைக் காய்த்துத் தொல்லை
யிருளகன்றி முத்தி பழுத் தின்ப நறுஞ் சுவையென்று மினிது நல்கு
மருமலிபூம் பொழிவகரூர் மாற்றுரைத்த
கற்பகத்தை வணங்கி வாழ்வோம் – திருவாரூர் புராணம்

சிந்தையிடர்க் கடனீந்திக் சிவானந்த
முணர்ந்திடவும் சிவானு பூதிப்
பந்தமுறச் சிவானந்த பரவையிடைப் படிந்திரவும் பற்றுதல்கும்
இந்திரியப் பகை தடிந்தி யான் எனது நீங்கும் வரிதய மேவும்
ஐந்துகரத்தந்தி முகத் தெந்தையிரு
பதாம்புயங் களகத்து வைப்பாம் – சரப புராணம்

**– சுபம் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் பகுதி ...



## இராமன் பேசுகிறான்

டாக்டர் - நஜன் - மயிலாப்பூர்

(பிரதீபா பிரசுரம்)

மனிதன் மனிதனாக வாழ்வது எப்படி? என்பதை வாழ்ந்து காட்டவே நான் பிறந்தேன். தர்மங்களை கடைப்பிடித்துக்காட்ட வந்த என்னை ஒரு தெய்வீக பிறப்பு என்று நினைத்து நீங்கள் குழப்பிக் கொள்ளலாகாது.



எப்படிப்பட்ட, கஷ்டங்கள் நேர்ந்தாலும் என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், மனோதிடம் குலையாமல் தர்மத்தில் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தர்மம் என்னவென்று தெரிந்துக் கொள்ள வேண்டாமா?

தாய், தந்தை, குரு இவர்களிடம் மரியாதை காட்டி அவர்கள் சொற்படி நடத்தல், " மாத்ரு தேவொ பவ", " பித்ரு தேவோ பவ", " ஆசார்ய தேவோ பவ"" என்று வேதம் அவர்களை தெய்வத்திற்கு சமமாகக் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடப்பிறந்தவர்களுடன் பாசத்துடன் இருந்து அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவது: ஜாதி அந்தஸ்து பாராமல் எல்லோரையுமே சகோதர சகோதரிகளாகக் கருதுவது. குகன், சுக்ரீவன், விபீஷணன் இவர்களை நான் சகோதரனாகவே கொண்டேன். (குகன் - வேடன், சுக்ரீவன் - வானரன், விபீஷணன் - ராக்ஷஸன்)

மனைவியினிடம் அன்பாக நடந்து அவள் கருத்துக்கு மதிப்பு கொடுப்பது. என் மனைவி சீதை தானும் காட்டுக்கு வருவதாகச் சொல்லி சில நியாயங்களை எடுத்துக் காட்டிய போது அவளை அழைத்துச் செல்ல சம்மதித்தேன்.

மக்களுக்கு நீதிபரிபாலிக்கும் போது தன்னலத்தை தியாகம் செய்தல்.

**கடமைக்கு அடிமை.**

**சத்தியத்தில் கடவுள்.**

**அனுஷ்டானங்கள் தவசி போன்று இருத்தல்.**

இந்த தர்மத்தைக் கடைபிடிப்பதில் எனக்கு மட்டும் திருப்தி ஏற்பட்டால் போதுமா? நான்தர்மத்தை அனுஷ்டிக்கிறேன் என்பதை பிறரும் உணரவேண்டும்.

அதே போல நீங்களும் உங்கள் மனச்சாட்சிக்கு நல்லவன் என்றிருந்தால் போதாது. பிறரும் உங்களை நல்லவன் என்று உணர வேண்டும்.

ஊருக்குச் செல்வதென்றால் வழிப்பயணத்தில் உணவு உட்கொள்ள தாயார் அன்னம் கட்டிக் கொடுப்பார்கள் இல்லையா? அதுமாதிரி என் தாயார் கௌசல்யாதேவியும் எனக்கு கட்டுச் சோறு கட்டித் தந்தார்கள். அது சாதாரணமாக நாம் உட்கொள்ளும் அன்னமில்லை. பின் என்ன என்கிறீர்கள்?

" ராமா! நீ எந்த தர்மத்தைப் பின்பற்றுகிறாயோ, அந்த தர்மமே உன்னிடம் கூடவே இருந்து உன்னைக் காப்பாற்றும்" என்ற ஆசீர்வாதமே அக்கட்டுச் சோறு.

வசிஷ்டர் எனக்கு வைத்த பெயர் ராமன். நம்மாழ்வார் வைத்தது நம்பன். ஆண்டாள் கூப்பிட்டது இனியன். விபீஷணன் இட்டபெயர் ராகவன்.

நான் ஒரு லட்சிய புருஷன் என்று வால்மீகி வருணிக்கிறார். மனிதன் என்று பிறந்துவிட்டால் குறைகள் இல்லாமலிருக்குமா? கம்பனும், துளசி தாசரும் என்னைத் தெய்வமாகவே கண்டனர்.

நான் கிருஷ்ணனைப்போல பால்ய வயதில் விளையாட்டு, விஷமம் எதுவும் செய்ததில்லை. நான் பாடு என் படிப்பு உண்டு என்றிருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நீயே கதி " என்று ஒருவன் சரணடைந்து விட்டால் அவனை எப்படியும் காத்து அருள வேண்டும் என்பது தர்மம். இந்த சரணாகதி தத்துவ விளக்க நூலாக விளங்குவது இராமாயணம். அதற்குச் "சரணாகதி சாஸ்திரம்" என்ற பெயரும் உண்டு.

இராவணனது தம்பி விபீஷணன், இராமனிடம் அடைக்கலம் புகுகிறான். அவன் என்ன வென்றாலும் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவன். எதிரியின் சொந்த தம்பி. ஆகவே அவனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று இராமர் பக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபித்தனர். அந்த எதிர்ப்பிகளிடையே இராமன் தன் முன்னோனாகிய சிபி சக்ரவர்த்தியை நினைக்கிறான்.

## எனது குரு விசுவாமித்திரர்

வசிஷ்டர்தான் என் குலகுரு என்றாலும் எனக்கு முக்கியமான மந்திரங்கள், தர்மங்கள், அவைகளை எல்லாம் போதித்தவர் விசுவாமித்திர மகரிஷிதான்.

ஒருநாள் விசுவாமித்திர முனிவர் என் தந்தையிடம் வந்து தான் ஒரு யாகம் செய்யப் போவதாகவும், அதை அசுரர்கள் நடத்தவிடாமல் செய்வதாயும், அந்த யாகம் வெற்றிகரமாக நடைபெற்று உதவ என்னை அனுப்பும்படியும் கேட்டார்.

என் அப்பாவிற்கு என்மேல் உயிர். அவன் சிறுவனாயிற்றே. நானே வந்து உங்கள் யாகம் விக்னமின்றி நடைபெற உதவி செய்கிறேன் என்றார். முனிவருக்கு கோபம் வந்துவிட்டது. எங்கள் குலகுரு வசிஷ்டர் குறுக்கிட்டு, என்னையும் என்னுடன் என் தம்பி லக்ஷ்மணனையும் சேர்த்து அனுப்பும்படி யோசனை கூறினார். நானும் லக்ஷ்மணனும் அவருடன் புறப்பட்டோம்.

இந்த விஸ்வாமித்திரர் யார் என்று சொல்ல வேண்டாமா?

வசிஷ்டர் எங்கள் குலகுரு என்று இருந்தாரேயொழிய என் பால்ய வயது வித்தைகளுக்கெல்லாம் குருவாக விளங்கியவர் விஸ்வாமித்ரரே. இவருக்கும் வசிஷ்டருக்கும் தகராறு. விஸ்வாமித்திரர் அரசகுமார். இவர் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி விட்டு களைப்படைந்து வசிஷ்டாஸ்ரமம் வந்தார்.

வசிஷ்டர் அவரை வரவேற்று அவருக்கும் அவர் படைகளுக்கும் ஒரு பெரும் விருந்தே வைத்து விட்டார். இந்த விருந்தை அளிக்க முடிந்தது 'காமதேனு' என்ற பசுவினால்தான். இதை அறிந்த விஸ்வாமித்திரர் அப்பசுவை தனக்குத் தரும்படி கேட்டார். வசிஷ்டர் சம்மதிக்கவில்லை. இதனால் வசிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது.

தொடரும் .........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஜோதி ........



## ஞானாமிர்தம்

### (வினா - விடை)

**1. வினா** "சைவம்" என்பதன் பொருள் என்ன?

**விடை** சிவசம்பந்தம் உடையது என்றும், சிவநெறி என்றும் பொருள்படும்.

**2. வினா** சமயம் என்றால் என்ன?

**விடை** சமயம் என்பது "மார்க்கம்" "நல்வழி" என்பதாகும்

**3. வினா** உலகத்தின் கர்த்தா யார்?

**விடை** சிவபெருமான்

**4. வினா** சிவம் என்பதன் பொருள் என்ன?

**விடை** சிவம் என்பது "மங்கலம்" எனப்படும்

**5. வினா** உலகத்தின் தாய் தந்தையராகப் போற்றப்படுபவர்கள் யாவர்?

**விடை** சிவபெருமான் - உமாதேவியார்
(ஜகதப்பிதரௌ வந்தே பார்வதி பரமேஸ்வரௌ)

## விபூதி - உருத்திராக்ஷ சிறப்பு

**6. வினா** சைவ சமய சிவசின்னங்கள் எவை?

**விடை** விபூதி, உருத்திராட்சம்

**7. வினா** விபூதியை எந்த முகமாக நின்று தரிக்க வேண்டும்?

**விடை** கிழக்கு அல்லது வடக்கு முகமாக நின்று தரிக்க வேண்டும்

**8. வினா** விபூதியைக் குறிக்கும் வேறு பெயர்கள் எவை?

**விடை** பூதி, வர்யம், ரக்ஷை, பஸ்மம், பஸிதம், க்ஷாரம், திருநீறு, சிரோவிரதம் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **வினா** விபூதியின் பெருமைகளை விளக்குகின்ற நூல்கள் எவை?

**விடை** குமாரதந்திரம், சிவதருமோத்திரம், பதுமசாங்கிதை, நீலபத்திரம், மதங்கம் முதலிய சிவாகமங்களும், மனுஸ்மிருதியும்

10. **வினா** திருநீற்றின் பெருமையை திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எவ்வாறு போற்றினார்?

**விடை** மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயன் திருநீறே!
என்று போற்றிப் பாடியுள்ளார்

11. **வினா** திருநீற்றின் பெருமையை சேக்கிழார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

**விடை** " பூசுநீறு போல் உள்ளும் மனிதர்கள்" என்பது சேக்கிழார் வாக்கு

12. **வினா** உபநிஷதங்களில் விபூதி எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

**விடை** பிருஹாதாரண்ய உபநிஷதத்தில் "பஸ்மம்" என்றும் தைத்ரியோபநிஷத்தில் "பூதி" என்றும் முண்டகோப நிஷத்தில் "சிரோவிரதம்" என்றும் குறிப்பிடப்படுகிறது

13. **வினா** சங்கிர சங்கிதை எனும் நூலில் விபூதியின் சிறப்பு எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது?

**விடை** " பிறவிப்பிணி தீர விபூதியே சிறந்த ஔஷதம் " எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

14. **வினா** " நீற்றினை இகழ்ந்தவன் சிவனை இகழ்ந்தவன் ஆவான் " என கூறும் நூல் எது?

**விடை** பிருகத் ஜபால உபநிஷதம் ஆகும்

15. **வினா** திருநீறு என்பதன் பொருள் என்ன?

**விடை** தன்னை அணிபவர்களின் தீவினைகளை நீறாக்குவதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **வினா** விபூதி என்பதன் பொருள் என்ன?

**விடை** (வி + பூதி) வி - மேலான, பூதி - செல்வம். தன்னை அணிபவர்களுக்கு மேலான செல்வத்தை தருவதாகும்

17. **வினா** பஸ்மம் என்பதன் பொருள் என்ன?

**விடை** தன்னை அணிபவர்களின் பாபங்களை நீறாக்குவதாகும்

18. **வினா** தமிழ் மூதாட்டி ஔவை திருநீற்றின் பெருமையை எவ்வாறு கூறியுள்ளார்?

**விடை** " நீறில்லா நெற்றி பாழ்" (என எச்சரித்துள்ளார்) நெற்றியில் திருநீறு இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறித்தியுள்ளார்

19. **வினா** விபூதியை எப்படித் தரிக்க வேண்டும்?

**விடை** உத்தூளனமாகவும், திரிபுண்டரமாகவும் தரிக்க வேண்டும்

20. **வினா** உத்தூளனம், திரிபுண்டரம் என்பதன் பொருள் என்ன?

**விடை** நெற்றியில் பரவப்பூசுவது உத்தூளனம் விபூதியை நீரில்கலந்து குழைத்து மூன்று விரல்களால் பூசுவது திரிபுண்டரமாகும்

21. **வினா** விபூதியை பூசுவதற்கு தகுதியுடையவர்கள் யாவர்?

**விடை** சைவ சமயத்தவர் அனைவருமே விபூதியை உத்தூளனமாக பூசவேண்டும். சிவதீக்ஷை பெற்றவர்கள் உத்தூளனமாக பூசியபின் திரிபுண்டரமாகப் பூசவேண்டும்

22. **வினா** உருத்திராக்ஷம் என்பதன் பொருள் என்ன?

**விடை** உருத்திர + அக்ஷம் - உருத்திராக்ஷம்
உருத்திர - சிவம்
அக்ஷம் - கண் எனவே உருத்திராக்ஷம் என்பது சிவனுடைய கண் எனப்பொருள்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஜோதி --------

# ஜோதிட வினா விடை

**1. வினா** ராசிகள் எத்தனை ? அவை எவை?

**விடை** ராசிகள் 12

| | | |
|---|---|---|
| 1. மேஷம், | 5. சிங்கம், | 9. தனுஸ், |
| 2. இஷபம் | 6. கன்னி, | 10. மகரம் |
| 3. மிதுனம், | 7. துலாம், | 11. கும்பம், |
| 4. கடகம், | 8. விருச்சிகம், | 12. மீனம். |

**2. வினா** நவக்கிரகங்கள் எவை?

**விடை**

| | |
|---|---|
| 1. சூரியன் | 6. சுக்கிரன் |
| 2. சந்திரன் | 7. சனி |
| 3. செவ்வாய் | 8. ராகு |
| 4. புதன் | 9. கேது |
| 5. குரு | |

**3. வினா** யுகங்கள் எத்தனை? எவை?

**விடை** நான்கு

| | |
|---|---|
| 1. கிருதயுகம் | 3. துவாபரயுகம் |
| 2. திரேதாயுகம் | 4. கலியுகம் |

**4. வினா** அயனங்கள் எவை?

**விடை** தைமாதம் ஆனிமாதம் வரை உத்தராயணம்

ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரை தெக்ஷிணாயணம்

**5. வினா** ருதுக்கள் எத்தனை? எவை?

**விடை** ஆறு

1. வசந்தருது – சித்திரை – வைகாசி
2. கிரீஸ்மருது – ஆனி – ஆடி
3. வருஷருது – ஆவணி – புரட்டாதி
4. சரத்ருது – ஐப்பசி – கார்த்திகை
5. ஹேமந்தருது – மார்கழி – தை
6. சிசிரருது – மாசி – பங்குனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. வினா** திதிகள் எத்தனை ? அவை எவை?

**விடை** திதிகள் 15

| | | |
|---|---|---|
| 1. பிரதமை | 6. ஷஷ்டி | 11. ஏகாதசி |
| 2. துதியை | 7. ஸப்தமி | 12. துவாதசி |
| 3. திருதியை | 8. அட்டமி | 13. திரயோதசி |
| 4. சதுர்த்தி | 9. நவமி | 14. சதுர்த்தசி |
| 5. பஞ்சமி | 10. தசமி | 15. அமாவாசை அல்லது பௌர்ணமி. |

**7. வினா** நக்ஷத்திரங்கள் எத்தனை? அவை எவை?

**விடை**

| | |
|---|---|
| 1. அஸ்வினி | 15. சுவாதி |
| 2. பரணி | 16. விசாகம் |
| 3. கார்த்திகை | 17. அனுஷம் |
| 4. ரோஹினி | 18. கேட்டை |
| 5. மிருகசீருடம் | 19. மூலம் |
| 6. திருவாதிரை | 20. பூராடம் |
| 7. புனர்பூஷம | 21. உத்தராடம் |
| 8. பூஷம | 22. திருவோணம |
| 9. ஆபிலியம் | 23. அவிட்டம |
| 10. மகம் | 24. சதயம் |
| 11. பூரம் | 25. பூரட்டாதி |
| 12. உத்தரம் | 26. உத்தரட்டாதி |
| 13. அத்தம் | 27. ரேவதி. |
| 14. சித்திரை | |

**8. வினா** நக்ஷத்திரங்களுக்குரிய ராசிகள் எவை?

**விடை**

அஸ்வினி – பரணி
கார்த்திகை 1ம் பாதம் } – மேடம்

கார்த்திகை 2, 3, 4 ரோஹினி
மிருக சீருடம் 1, 2 } – இடபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி துணை

மாத சஞ்சிகை

# அருள் ஜோதி



## சந்தாவிபரம்

| | | |
|---|---|---|
| ஆயுட்காலச் சந்தா | 1000. | 00 |
| ஆண்டுச் சந்தா | 250. | 00 |
| தனிப் பிரதி | 25. | 00 |

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


**டாக்டர். ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார்**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

# கொழும்பு-இந்துமத குருபீடம்

## (சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்)

90/22, ஜோசப் டயஸ் லேன், புளூமெண்டால் றோட்,

கொழும்பு - 15.

T. P. 527025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org